ஸ்ரீ:.

கூரத்தாழ்வான் இளைய திருக்குமாரரான ஸ்ரீவேதவ்யாஸபட்டரென்கிற

சீராமப்பிள்ளையின் திருக்குமாரரான வேதாசார்யபட்டர்

அருளிச்செய்த

க்ஷமாஷோடசிஸ்தோத்ரம்.

ஸ்ரீரங்கநாதனுடைய பொறுமையென்னுங் குணத்தை வருணிக்கும்

பதினாறு ச்லோகங்கள் கொண்ட நூல்.

ஸ்ரீகாஞ்சி. அண்ணங்கராசாரியர் இயற்றிய உரையுடன் கூடியது.

தனியன்.

यश्चक्रे रङ्गिणस्स्तोत्रं क्षमाषोडशिनामकम् ।
वेदव्यासस्य तनयं वेदाचार्यं तमाश्रये ॥

யச் சக்ரே ரங்கிணஸ் ஸ்தோத்ரம் க்ஷமாஷோடசிநாமகம்,
வேதவ்யாஸஸ்ய தநயம் வேதாசார்யம் தமாச்ரயே.

ஸ்ரீரங்கநாதன் விஷயமான க்ஷமாஷோடசிஸ்தோத்ரத்தை யருளிச்செய்தவரும் வேதவ்யாஸ பட்டருடைய திருக்குமாரருமான வேதாசார்யபட்டரைப் பணிகின்றேனென்கை.

க்ஷமாவிஷயமான ஷோடசச்லோகங்களையுடைய ஸ்தோத்ரமாதலால் க்ஷமாஷோடசிஸ்தோத்ரமென்று இதற்குத் திருநாமமாயிற்று. ... ... *

—[—]—

श्रीरङ्गेश ! यया करोषि जगतां सृष्टिप्रतिष्ठाक्षयान् अत्रामुत्र च भोगमक्षयसुखं मोक्षं च तत्तत्तृषाम् ।
त्वत्स्वातन्त्र्यमपोह्य कल्पितजगत्क्षेमाऽतिहृद्या स्वतः क्षान्तिस्ते करुणासखी विजयतां क्षेमाय सर्वात्मनाम् ॥१॥

ஸ்ரீரங்கேச யயா கரோஷி ஜகதாம் ஸ்ருஷ்டிப்ரதிஷ்டாக்ஷயாந்
அத்ராமுத்ர ச போகமக்ஷயஸுகம் மோக்ஷஞ்ச தத்தத்த்ருஷாம்,
த்வத்ஸ்வாதந்த்ர்யமபாஸ்ய கல்பிதஜகத்க்ஷேமாதிஹ்ருத்யா ஸ்வத:
க்ஷாந்திஸ் தே கருணாஸகீ விஜயதாம் க்ஷேமாய ஸர்வாத்மநாம்.

ஸ்ரீரங்கேச! ஜகதாம் ஸ்ருஷ்டி ப்ரதிஷ்டா க்ஷயாந், அத்ர போகம் அமுத்ர போகம் ச அக்ஷயஸுகம் மோக்ஷம் ச தத்தத் த்ருஷாம் யயா கரோஷி (ஸா) த்வத்ஸ்வாதந்த்ர்யம் அபாஸ்ய கல்பித ஜகத் க்ஷேமா ஸ்வத: அதி ஹ்ருத்யா கருணாஸகீ தே க்ஷாந்தி: ஸர்வாத்மநாம் க்ஷேமாய விஜயதாம்.

ஸ்ரீரங்கநாதரே! உலகங்களினுடைய படைத்தல் காத்தல் அழித்தல் என்னுங் கார்யங்களையும் இஹலோக போகங்களையும் ஆமுஷ்மிக போகங்களையும் கைவல்யானந்தத்தையும் பரமபோனந்தத்தையும் அவ்வவற்றில் விருப்ப முடையவர்களுக்கு யாதொரு பொறுமைக் குணத்தினால் உண்டாக்குகின்றீரோ, அப்படிப்பட்டதாய் தேவரீருடைய ஸ்வாதந்திரியத்தைத் தள்ளி ஜகத்துக்கு க்ஷேமத்தை விளைவிப்பதாய் இயற்கையாகவே பரம போக்யமாய் கருணைகுணத்திற்குத் துணையான தேவரீரது பொறுமைக் குணமானது ஸகல சேதநருடையவும் க்ஷேமத்தின் பொருட்டு நித்ய ஸ்ரீர்நித்ய மங்களமாக விளங்குக.

இந்த திவ்யக்ரந்தம் இடையூறின்றி முடிவதற்காகச் செய்த மங்களாசரணமிது. ஆசீர் நமஸ்க்ரியா வஸ்துநிர்தேசங்களுள் இது ஆசீஸ்ஸெனப்படும். இந்த ஸ்துதி முழுவதும் க்ஷமை யென்கிற ஒரு குணத்தைப் பற்றியதே யாதலால் அந்த க்ஷமை தனக்கே இந்த ஆசீஸ்ஸு ஆயிற்று.

ஸகலஜகத்துக்களின் ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களைச் செய்வதற்கும் இம்மை மறுமையின்பங்களை யளிப்பதற்கும் ஸாதனமாகி ஜகத் க்ஷேமத்தை நிர்வஹியாநின்றது எம்பெருமானுடைய க்ஷமாகுணம். அப்பெருமானுடைய நிரங்குச ஸ்வாதந்த்ர்யமே தலை யெடுக்குமாகில் ஜகத்துக்கு க்ஷேமம் அரிதாகும்; இந்த க்ஷமையானது அந்த ஸ்வாதந்த்ரியத்தைத் தலையெடுக்கவொட்டாதபடி அமுக்கி, கருணாகுணத்தையும் துணைகொண்டு அவ்வோபுருஷார்த்தங்களிலே ருசியுடைய சேதநர்களுக்கெல்லாம் வேண்டினவற்றை யளித்துக் காக்கின்றதாயிற்று. இப்படிப்பட்ட க்ஷமாகுணம் மேம்பட்டு நின்று விளங்கி உலகுக்கெல்லாம் சேமவைப்பாகவேணு மென்றாராயிற்று.

ரக்ஷணத்திற்கு க்ஷமை வேண்டுமோ னாலும் ஸ்ருஷ்டி ஸம்ஹாரங்களுக்கும் க்ஷமை வேண்டுமோ வென்னில்; வேண்டும்; "லௌகபத்யம் அநுக்ரஹகார்யம்" என்பர் நம் முதலிகள். இதுதன்னை ஸ்ரீவைகுண்டஸ்தவத்தில் «ஸம்வர்த்தவர்த்தி நிகிலம்» என்ற ச்லோகத்தில் ஆழ்வான் விரியவருளிச் செய்தார். கரணகளேபரங்களை அதிப்ரவ்ருத்திகளுக்கு ஹேதுவாக்கி அனர்த்தப்பட்டுப் போகாதபடி ஒழிக்கிவைக்கைதான் ஸம்ஹாரமாகையாலே அதுவும் அநுக்ரஹ கார்யமென்றிட்டு க்ஷமாஸம்பந்தமா யிருக்கும்.

அக்ஷயபோகம் என்று அபுநராவ்ருத்திலக்ஷணமான கைவல்யபோகத்தைச் சொல்லுகிறது; ஐச்வர்ய மக்ஷரகதிம் என்றவிடத்திற்போல. மூன்றாவது பாதத்தில் அபாஸ்ய, அபோஹ்ய என்பன பாடபேதங்கள்: பொருள் ஒன்றே. கருணாஸகீ—தத்புருஷனுமாம் பஹுவ்ரீஹியாகவுமாம். கருணையும் பொறுமையும் கூடியே உலகுக்கு க்ஷேமமளிப்பன. .... (1)

पापानां प्रथमोऽस्म्यहं भवति चेच्छास्त्रं प्रमाणं परं श्रीरङ्गेश ! न विद्यतेऽत्र विशयस्सन्त्येव ते साक्षिणः ।
पृष्ट्वा तानधुना मयोदितमिदं सत्येन गृह्येत चेत् सत्यं ह्युक्तमिति क्षमस्व भगवन् सर्वं तदस्मत्कृतम् ॥२॥

பாபாநாம் ப்ரதமோஸ்ம்யஹம் பவதி சேத் சாஸ்த்ரம் ப்ரமாணம் பரம்
ஸ்ரீரங்கேச ந வித்யதேத்ர விசயஸ் ஸந்த்யேவ தே ஸாக்ஷிண:,
ப்ருஷ்ட்வா தாநதுநா மயோதிதமிதம் ஸத்யேந க்ருஹ்யேத சேத்
ஸத்யம் ஹ்யுக்தமிதி க்ஷமஸ்வ பகவந் ஸர்வம் ததஸ்மத்க்ருதம். (2)

ஸ்ரீரங்கேச! அஹம் பாபாநாம் ப்ரதம: அஸ்மி. சாஸ்த்ரம் பரம் ப்ரமாணம் பவதி சேத் அத்ர விசய: ந வித்யதே, தே ஸாக்ஷிண: ஸந்தி ஏவ, அதுநா தாந் ப்ருஷ்ட்வா மயா உதிதம் இதம் ஸத்யேந க்ருஹ்யேத சேத் பகவந்! ஸத்யம் ஹி உக்தம் இதி அஸ்மத் க்ருதம் ஸர்வம் தத் க்ஷமஸ்வ.

ஸ்ரீரங்கநாதரே! அடியேன் பாபிகளில் தலைவனாக வுள்ளவன்; சாஸ்த்ரமானது பரம ப்ரமாணமாக ஆகுமாகில் அடியேன் மஹா பாபியென்பதில் ஸந்தேஹமில்லை; தேவரீருக்கு [விசாரிக்கும்படியாக] ஸாக்ஷிகள் இருக்கவே யிருக்கின்றார்கள்; இப்போது அவர்களை வினவி அடியேன் சொன்ன விது ஸத்யமாகக் கொள்ளப்படுமாகில், எம்பெருமானே! (இவனால்) உண்மை பேசப்பட்டதன்றோ வென்று இதையே குணமாகக்கொண்டு அடியேன் செய்த அந்தப் பாவங்களை யெல்லாம் பொறுத்தருள்க.

... எவ்வளவு பாபங்கள் செய்தாலும் பொய் சொல்லி யொளித்திடாமல் உள்ளது உள்ளபடியே ஒப்புக்கொண்டால் எம்பெருமானுடைய பொறுமைக்கு இலக்காகலாமென்

படு இந்தச்லோகத்தினால் காட்டப்படுகிறது. ஸ்வாமி ! அடியேன் பாவமே செய்து பாபி யானவர்களில் முதல்வனாக எண்ணக்கூடியவனாயிருக்கிறேன் என்பதில் ஸந்தேஹமில்லை. நான் சொல்லுகிறவிது பொய்யென்று திருவுள்ளமாகில் தேவரீரால் ஏற்படுத்தப்பட்டுள்ள ஸாக்ஷிகளான சந்த்ர ஸூர்ய பூதபஞ்சகாதிகளைக் கேட்டு உண்மை தெளியவடுக்கும் ; அங்ஙனம் கேட்டு அவர்களால் அடியேனை , ஸத்யவாதியாகத் திருவுள்ளம்பற்ற நேர்ந்தால், ஸத்யமென்கிற வொரு குணமுடைய விவன்பக்கலிலே நாம் க்ஷமை காட்டவேண்டாவோ வென்று தேவரீருக்கே இரக்கம் பிறந்து தீரும் என்பது பரமதாத்பர்யம். செய்தபாவங்களை இல்லைசெய்யாதே இசைந்து போருகின்ற வடியேனை க்ஷமைக்கு இலக்காக்குவதே தகுதியென்றாராயிற்று. "பவதிசேத் சாஸ்த்ரம் ப்ரமாணம் பரம்" என்பது மத்யம தீபமாகி முன்னும் பின்னும் அந்வயிக்கும். 'தே' என்பது ப்ரதமாபஹு வசநமாகவும் ஷஷ்ட்யேக வசனமாகவும் கொள்ளத்தகும். ஸத்யேந என்றது ஸத்யத்வேந என்றபடி; தத்த்வேந என்றும் பாடமுண்டு. ... . (2

त्वत्क्षान्तिः खलु रङ्गराज ! महती तस्याः पुनस्तोषणे पर्याप्तं न समस्तचेतनकृतं पापं ततो मामकम् ।
लक्ष्यं नेति न मोक्तुमर्हसि यतः कुत्रापि तुल्यो मया नान्यस्सिद्ध्यति पापकृत् तदधुना लब्धं तु नोपेक्ष्यताम् ॥३॥

த்வத்க்ஷாந்தி: கலு ரங்கராஜ! மஹதி தஸ்யா: புநஸ் தோஷணே
பர்யாப்தம் ந ஸமஸ்த சேதநக்ருதம் பாபம் ததோ: மாமகம்,
லக்ஷ்யம் நேதி ந மோக்துமர்ஹஸி யத: குத்ராபி துல்யோ மயா
நாந்யஸ் ஸித்த்யதி பாபக்ருத் ததது நா லப்தம் து நோபேக்ஷ்யதாம்.

ஹேரங்கராஜ ! த்வத் க்ஷாந்தி : மஹதீ கலு. தஸ்யா : தோஷணே புந : ஸமஸ்த சேதந க்ருதம் பாபம் ந பர்யாப்தம் ; தத : மாமகம் பாபம் ந லக்ஷ்யம் இதி மோக்தும் ந அர்ஹஸி ; யத : மயா துல்ய : பாப க்ருத் அந்ய : குத்ராபி ந ஸித்யதி ; தத் அதுநா லப்தம் து ந உபேக்ஷ்யதாம்.

ஸ்ரீரங்கநாதனே ! உன்னுடைய பொறுமைக் குணமானது மிகவும் பெருவயிறு உடையதன்றோ; அதை (வயிறார வுணவுகொடுத்து) த்ருப்தி செய்விக்கும் விஷயத்தில் உலகிலுள்ள சேதநர்களெல்லாரும் செய்த பாவமும் வல்லதன்று ; ஆனபின்பு நானொருவன் செய்த பாபம் எந்தமூலைக்கென்று நினைத்து என்னை நீ உபேக்ஷிக்கலாகாது ; ஏனென்றால், என்னையொத்த பாபிஷ்டன் வேறொருவன் இவ்வுலகிலெங்கும் தேறமாட்டானன்றோ ; ஆதலால் இப்போது கிடைத்த விதனை உபேக்ஷிக்கவேண்டா.

ஸ்ரீரங்கநாதரே ! தேவரீர் *ஒருவரையும் நின்னொப்பாரொப்பிலா வென்னப்பா* என்றும், *தன்னொப்பாரில்லப்பன்* என்றும் காருண்ய ஸௌந்தர்யாதிகளில் ஒப்பற்றவராகப் பேர்படைத் திருக்குமாபோலே அடியேனும் பாபிகளில் ஒப்பற்றவனென்று பேர்பெற்றிருக்கிறேன் ; ஆகலால் என்னொருவனுடைய பாபங்களைக் கொண்டுதான் தேவரீருடைய க்ஷமை வயிறாரவுண்டு களிக்கமுடியும். உலகத்திலுள்ள மற்றெல்லாருடையவும் பாபங்களும் ஏகதேசமாக இருந்தாலும் அடியேனுடைய பாபங்களை அப்படி நினைக்கலாகாது; என்னொருவன் தவிர மற்ற ஸமஸ்த சேதநர்களும் செய்த பாபங்களத்தனையும் தேவரீருடைய க்ஷமைக்கு ஒருதுற்றுக்கு ஆற்றுவென்பது வாஸ்தவமே. அடியேன் பாபிகளில் [illegible]னால் எனது பாபங்களைக் கொண்டே தேவரீருடைய க்ஷமை வயிறு நிரப்பத் தகுமென்றாயிற்று.

தயாசதகத்திலுள்ள *மயி திஷ்டதி து்ஷ்க்ருதாம் ப்ரதானே மிததோஷாநிதராந் விசிந்வதீ த்வம், அபிதசதைர்பூர்ணகுக்ஷி: கமலாகாந்ததயே ! கதம் பவித்ரீ * என்றச்லோகம் பெரும்பாலும் இதனையொக்கும்.

"த்வத்க்ஷாந்தி: மஹதி" என்றது மஹத்தான குக்ஷியையுடையது என்றபடி ... (3)

पुण्यं पापमिति द्वयं खलु तयोः पूर्वेण यत्साध्यते तत्त्वद्विस्मृतिकारकं तनुभृतां रङ्गेश ! संजायते ।
पाश्चात्यस्य तु यत्फलं तदिह ते दुःखच्छिदः स्मारकं तेनानेन कृतं तदेव विशुनेत्यस्मत्कृतं क्षम्यताम् ॥४॥

புண்யம் பாபமிதி த்வயம் கலு தயோ: பூர்வேண யத் ஸாத்யதே தத் த்வத்விஸ்ம்ருதிகாரகம் தநுப்ருதாம் ரங்கேச ஸஞ்ஜாயதே, பாச்சாத்யஸ்ய து யத் பலம் ததிஹ தே துக்கச்சிதஸ் ஸ்மாரகம் தேநாநேந க்ருதம் ததேவ சிசுநேத்யஸ்மத்க்ருதம் க்ஷம்யதாம். (4)

ஹே ரங்கேச! புண்யம் பாபம் இதி த்வயம் கலு, தயோ: பூர்வேண யத் ஸாத்யதே தத் தநுப்ருதாம் த்வத் விஸ்ம்ருதி காரகம் ஸம்ஜாயதே, பாச்சாத்யஸ்ய து யத் பலம் தத் இஹ துக்கச்சித: தே ஸ்மாரகம்; தேந அநேந சிசுநா தத் ஏவ க்ருதம் இதி அஸ்மத்க்ருதம் க்ஷம்யதாம்.

ஸ்ரீரங்கநாதனே! (உலகில்) புண்யமென்றும் பாவமென்றுமிரண்டுதானே யுள்ளது; அவ்விரண்டினுள் முந்தியதான புண்யத்தினால் பெறக்கூடியது ஸம்பத்து; அது மனிதர்களுக்கு உன்னை மறக்கச் செய்வதாக ஆகின்றது; மற்றையதான பாபத்தின் பயனைப் பெறக்கூடிய துக்கானுபவமானது இவ்வுலகின்கண் ஆர்த்திஹரனான உன்னை (இடைவிடாது) நினைக்கச் செய்வதாகும்; ஆதலால் இந்தப் பையல் (நம்மை அநவரதம் நினைக்கச் செய்யுமதான) அந்தப் பாபத்தையே செய்து போந்தானென்று திருவுள்ளம் பற்றி யாம் செய்த தீவினை யெல்லாம் க்ஷமிக்கத் தக்கது.

தாம் பாபம் செய்தது மிகவும் பொருத்தமானதென்று ஒருசமத்காரமாகப் பேசுகிறாரிதில். உலகில் புண்யமென்றும் பாபமென்றும் இரண்டேயுள்ளன. புண்யம் செய்தால் அதன்பலனை ஸம்பத்துக்களையநுபவிக்க நேரும்; பாபஞ்செய்தால் அதன் பலனைப் பலவகைக் கஷ்டங்களையநுபவிக்கநேரும். ஸம்பத்துக்களை யநுபவிக்க நேர்ந்தால் பகவானை ஸ்மரிக்க அவகாசமே யில்லையாகிறது; கஷ்டங்களையநுபவிக்கும் போதுதான் "பகவானே! உனக்குக் கண்ணில்லையா?" என்று சொல்லிக்கொண்டாவது பகவானைச்சிந்திக்க நேர்கின்றது. ஆகவே பகவானுடைய விஸ்மரணத்தை யுண்டுபண்ணவல்ல ஸம்பத்துக்களுக்குக் காரணபூதமான புண்யத்தைச் செய்வதிற் காட்டிலும், பகவானுடைய நிரந்தரஸ்மரணத்தை யுண்டு பண்ணவல்ல கஷ்டங்களுக்குக் காரணபூதமான பாபத்தைச் செய்வதேயன்றோ நன்று. இந்த நிரூபணத்தின்படி நன்றென நினைக்கத்தக்க பாபத்தையே அடியேன் செய்திருப்பது நன்றுதானே; இதனை க்ஷமிக்கத் தடையுண்டோவென்கிறார். புண்யம் செய்து செல்வவாழ்க்கையிலிருப்பவர்கள் பெரும்பாலும் எம்பெருமானை ஸ்மரிக்கவும் அவகாசம் பெறார்களென்பதும், பாபஞ்செய்து க்லேசங்களையநுபவிக்குமவர்களே எம்பெருமானை இடையறாது சிந்திக்க அவகாசம் பெறுகின்றார்களென்பதும் இங்குத் தெரிவிக்கப்பட்டதாகிறது. "पूर्वपुण्यविभवव्ययलब्धास्सम्पदो विपद एव विमृष्टाः—பூர்வபுண்ய விபவவ்யயலப்தாஸ் ஸம்பதோ விபத ஏவ விம்ருஷ்டா:." என்ற நைஷதச்லோகம் இதில் இரண்டாவது பாதத்திற்குச்சேர அநுஸந்தேயம். ... ... (4)

पुण्यं यत्तव पूजनं भवति चेत् तत्कर्तुरिष्टे कृते तत्स्याद्रङ्गपते ! कृतप्रतिकृतं सर्वेऽपि तत्कुर्वते ।
पापं चेदपराध एव भवतस्तत्कर्तृसंरक्षणे क्षान्तिस्ते निरुपाधिका निरुपमा लक्ष्येत तत् क्षम्यताम् ॥५॥

புண்யம் யத் தவ பூஜநம் பவதி சேத் தத்கர்த்துரிஷ்டே க்ருதே தத் ஸ்யாத் ரங்கபதே க்ருதப்ருதிக்ருதம் ஸர்வேபி தத் குர்வதே, பாபஞ்சேத் அபராத ஏவ பவதஸ் தத்கர்த்ருஸம்ரக்ஷணே க்ஷாந்திஸ் தே நிருபாதிகா நிருபமா லக்ஷ்யேத தத் க்ஷம்யதாம். (5)

ஹே ரங்கபதே! புண்யம்(இதி) யத் தவ பூஜநம் பவதி சேத் தத்கர்த்து: இஷ்டே க்ருதே தத் க்ருதப்ரதிக்ருதம் ஸ்யாத், தத் ஸர்வே அபி குர்வதே, பாபம் சேத் பவத: அபராத: ஏவ; தத்கர்த்ரு ஸம்ரக்ஷணே (ஸதி) தே க்ஷாந்தி: நிருபாதிகா நிருபமா லக்ஷ்யேத, தத் க்ஷம்யதாம்.

ஸ்ரீரங்கநாதனே! புண்யமென்பது உன்னை வழிபாடு செய்வதாக முடிகின்றது. அந்தப்புண்ணியம் செய்தவனுக்கு (நீ) இஷ்டஸித்தியைப் பண்ணிக் கொடுத்தால், செய்த நன்றிக்குக் கைம்மாறு செய்ததாகுமத்தனை அது; அவ்விதமான காரியத்தை (உலகில்) எல்லாருமே செய்கின்றார்கள். உன் விஷயத்தில் அபராதப்படுவதென்பது யாதோ, அதுவே பாபமெனப்படும்; அப்படிப்பட்ட பாபம் செய்யுமவனை ரக்ஷிக்குமளவில் உன்னுடைய பொறுமைக்குணமானது உபாதியற்றதாகவும் ஒப்பற்றதாகவும் காணப்படும்; ஆகவே க்ஷமித்தருள்வது.

புண்யம் செய்தவர்களை ரக்ஷிப்பதிற் காட்டிலும் பாபம் செய்தவர்களை ரக்ஷிப்பதே யுக்தமானதென்று நிரூபிக்கிறாரிதில். *ச்ருதிஸ் ஸ்ம்ருதிர் மமைவாஜ்ஞா யஸ் தாமுல்லங்க்ய வர்த்ததே, ஆஜ்ஞாச்சேதீ மம த்ரோஹீ மத்பக்தோபி நவைஷ்ணவ: * என்று எம்பெருமான் தானே சோதிவாய் திறந்தருளிச் செய்தபடியே ச்ருதி ஸ்ம்ருதி முதலானவற்றில் விதித்தபடி செய்கை புண்யமென்றும், அவற்றில் மறுக்கப்பட்டவற்றைச் செய்கை பாபமென்றும் உலகமறியும். *வர்ணாச்ரமாசாரவதா புருஷேண பர: புமாந், விஷ்ணுராராத்யதே பந்தா: நாந்யஸ் தத்தோஷகாரக: * என்ற பிரமாணத்தின்படி வர்ணாச்ரமாசாரங்களோடு கூடியிருக்கையாகிற புண்யமானது பகவதாராதந ரூபமென்றும் தெரிவிக்கப்பட்டது. ஆகவே தன்னை ஆராதிப்பதாகிற புண்யத்தைச் செய்பவர்களையே எம்பெருமான் ஸம்ரக்ஷிக்கிறனென்று தேறினால் இது க்ருதப்ரதிக்ருதமாயிற்று; அதாவது உபகாரம் செய்தவர்களுக்கு ப்ரத்யுபகாரம் செய்தபடியாயிற்று. செய்த நன்றிக்குக் கைம்மாறு செய்கையாகிறவிது உலகில் யாவரிடத்திலும் காண்பதொன்றாதலால் இது எம்பெருமானுக்கு ஏற்றமாகுமோ? நிர்ஹேதுகஸ்வபகாரம் செய்வதே தன்னேற்றமாதலால் அபராதிகளையும் ரக்ஷித்துப் பெருமை பெறப் பார்க்கவேணுமே. அப்போதன்றோ க்ஷமாகுணத்தின் வீறு விளங்கும் என்று விஜ்ஞாபித்துத் தம்பக்கலிலே க்ஷமையைக் காட்டியருளும்படி வேண்டினாராயிற்று.

"பவதி சேத்" என்றது—பவத்யேவ என்றபடி. "உச்சைர் கதிர் ஜகதி ஸித்யதி தர்மதச் சேத்" [சம்பூராமாயணே] என்றவிடத்திற் போல. ... ... (5)

न छिद्राणि कृतान्यनेन निरयैर्नालं पुनः कल्पितैः पापानामिति मत्कृते तदधिकान् कर्तुं प्रवृत्ते त्वयि ।
तेभ्योऽप्यभ्यधिकानि तान्यहमपि क्षुद्रः करोमि क्षणात् तद्यत्नस्तव निष्फलः खलु भवेत् तत्ते क्षमैव क्षमा ॥६॥

ந த்வித்ராணி க்ருதாந்யநேந நிரயைர் நாலம் புந: கல்பிதை:
பாபாநாமிதி மத்க்ருதே ததிகாந் கர்த்தும் ப்ரவ்ருத்தே த்வயி,
தேப்யோப்யப்யதிகாநி தாந்யஹமபி க்ஷுத்ர: கரோமி க்ஷணாத்
தத் யத்நஸ் தவ நிஷ்பல: கலு பவேத் தத் தே க்ஷமைவ க்ஷமா.(6)

(ரங்கபதே!) அநேந க்ருதாநி (பாபாநி) ந த்வித்ராணி; பாபாநாம் கல்பிதை: நிரயை: ந அலம்-இதி மத்க்ருதே ததிகாந் கர்த்தும் த்வயி ப்ரவ்ருத்தே ஸதி க்ஷுத்ர: அஹம் அபி க்ஷணாத் தேப்ய: அபி அப்யதிகாநி தாநி கரோமி, தத் தவ யத்ந: நிஷ்பல: கலு பவேத், தத் க்ஷமா ஏவ தே க்ஷமா.

ஸ்ரீரங்கநாதனே! இப்பாவியினால் செய்யப்பட்ட பாபங்களானவை ஸ்வல்பமானவையல்ல; (ஆதலால்) பாபங்களுக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற நரகங்கள் போதா என்று கருதி அடியேனுக்காக உள்ள நரகங்களைக்காட்டிலும் அதிக நரகங்களை ஸ்ருஷ்டிக்க நீ முயன்றால் அதற்குள் அடியேனும் ஒருகொடிப் பொழுதில் முன்னிலும் அதிகமான பாபங்களையே செய்திடுவேன்; ஆகவே உன்னுடைய முயற்சி பயனற்றதாகவன்றோ ஆய்விடும். ஆனபின்பு க்ஷமிப்பது தான் உனக்குத் தகுதியானது.

தம்முடைய பாவங்கள் அளவுகடந்தவை யென்பதையும் ஒருநாளுமிலே ஓய்கின்றனவல்ல என்பதையும் ஒரு சமத்காரமாகச் சொல்லி இவற்றை க்ஷமிப்பது தவிர வேறுவழியில்லை யென்கிறார். பாபபலன்களை அநுபவிப்பதற்காக இப்போது ஸ்ருஷ்டித்திருக்கின்ற நரகங்கள் போதாவென்று எண்ணி இன்னமும் அடியேனுக்காக நரகங்களை தேவரீர் ஸ்ருஷ்டிக்கப் புகுமளவில் அடியேனும் மேன்மேலும் ஓயாது பாபங்களை அளவின்றிச் செய்துகொண்டே போருவேன். தேவரீர் நரகஸ்ருஷ்டியில் வல்லவரா? அடியேன் பாபஸ்ருஷ்டியில் வல்லவனா? என்று ஆராயுமளவில் தேவரீருடைய வல்லமை தாழ்ந்ததாகி அடியேனுடைய வல்லமையே மேன்மைபெற்று ஓங்கி நிற்கும். ஆகவே தேவரீர் வீணாக நரகஸ்ருஷ்டியில் முயல்வதைவிட 'இப்பையல் செய்தபாவங்களை க்ஷமிப்பதே நலம்' என்று திருவுள்ளம்பற்றி நிற்றல் தகும் என்றாராயிற்று. [மத்க்ருதே என்றது அவ்யயம்; என்பொருட்டு என்றபடி.] .... (6)

संभूयाखिलपातकैर्बहुविधं स्वं स्वं फलं दीयतां सर्वं सह्यमिदं मम त्वयि हरे ! जाग्रत्यपि त्रातरि ।
दुःखाक्रान्तमवेक्ष्य मामिह जनो दुष्टाशयस्त्वद्गुणान् क्षान्त्यादीन् प्रति दुर्वचं यदि वदेत् सोढुं न तच्छक्यते ॥७॥

ஸம்பூயாகிலபாதகைர் பஹு-விதம் ஸ்வம் ஸ்வம் பலம் தீயதாம்
ஸர்வம் ஸஹ்யமிதம் மம த்வயி ஹரே ஜாக்ரத்யபி த்ராதரி,
து:க்காக்ராந்த மவேக்ஷ்ய மாமிஹ ஜநோ துஷ்டாசயஸ் த்வத்குணாந்
க்ஷாந்த்யாதீந் ப்ரதி துர்வசம் யதி வதேத் ஸோடும் ந தந் சக்யதே. (7)

ஹரே! அகிலபாதகை: ஸம்பூய பஹு-விதம் ஸ்வம்ஸ்வம் பலம் தீயதாம், இதம் ஸர்வம் மம ஸஹ்யம், இஹ துஷ்ட ஆசய: ஜந: த்ராதரி த்வயி ஜாக்ரதி அபி மாம் து:க்க ஆக்ராந்தம் அவேக்ஷ்ய க்ஷாந்தி ஆதீந் த்வத் குணாந் ப்ரதி துர்வசம் வதேத் யதி தத் ஸோடும் ந சக்யதே.

எம்பெருமானே! (நான் செய்த) ஸகலபாபங்களும் ஒன்று சேர்ந்து தாம்தாம் கொடுக்கவேண்டிய பலவகைப்பட்ட பலன்களைத் தாராளமாகவே கொடுக்கட்டும்; இதையெல்லாம் நான் ஸஹித்தேயாக வேண்டும். (ஆனாலும்) இவ்வுலகில் துர்ப்புத்தியுள்ள ஜனமானது, ரக்ஷகனை நீ ஜாகரூகனாக இருக்கவும் என்னை (பாபபலன்களான) துக்கங்களையநுபவிப்பவனாகக் கண்டு பொறுமைமுதலிய உனது திருக்குணங்களைப்பற்றி சொல்லத்தகாத வார்த்தையைச் சொல்லுமாகில் அதுதான் (அடியேனால்) ஸஹிக்க முடியாதது.

பிரானே! அடியேன் பலவகைப்பட்ட பாவங்களை நிரவதிகமாகச் செய்து போந்திருக்கிறேனாதலால் அவையெல்லாமொன்றுகூடிப் பலனளித்தே தீரவேண்டும். பாபங்கள் தரும் பலன் துக்கமேயாதலால் பலவகைப்பட்ட துக்கங்கள் அடியேனுக்கு சேர்ந்து தீரவேண்டும். அவற்றை யநுபவிக்க அடியேன் இருப்பக்க வொண்ணுமோ? "யத் யத் பவ்யம் பவது பகவந்! பூர்வகர்மாநுரூபம்" என்று சொல்லிக் கொண்டு எதையும் அநுபவிக்க வேண்டியதே; "தன் காய் பொருத கொம்புண்டோ?" என்றபடி எதுவும் ஸஹ்யமேயாகும்; ஆனால் ஒன்றுமாத்திரமே அடியேனால் ஸஹிக்க வொண்ணாதது; அது எது வென்னில்; ஸர்வரக்ஷகனென்று பேர் பெற்றிருக்கின்ற நீ ரக்ஷாதீக்ஷிதனாயிருக்கச் செய்தேயும் அந்த ரக்ஷணத்திற்கு நானொருவன் இலக்காகாமல் பாபபலன்களான துக்கங்களையே அநுபவித்துக் கொண்டிருந்தேனாகில் இது உன்னுடைய க்ஷமாதி குணங்களுக்கு அவத்யமாகுமன்றோ? உலகில் ரந்த்ராந்வேஷி ஜனங்கள் பலவுண்டே; உனது திருக்குணங்களின்மீது என்ன குற்றத்தைக் கூறலாமென்று தேடித் திரிவார் பலருண்டே; அப்படிப்பட்ட ஜனங்கள், நான் துக்காநுபவம் செய்வதே காரணமாக உன்னுடைய க்ஷமை முதலிய திருக்குணங்களின் மீது வாய்கொண்டு சொல்ல வொண்ணாத அவத்யத்தைக் கூறுமே; அது தான் அடியேனால் ஸஹிக்கப் போகாதது. ஆதலால் அஸஹ்யமான அந்த துக்கத்தை மாத்திரம் உண்டுபண்ணாதொழிய வேணும்—என்று பிரார்த்திக்கும் முகத்தினால் "அடியேன்

மீது க்ஷமை முதலிய குணங்களை ப்ரகாசிக்கச் செய்தருளி அடியேன் செய்த பாவங்களை யெல்லாம் பொறுத்தருளி உலகம் புகழ நிற்கவேணும்'' என்று விண்ணப்பஞ் செய்தாராயிற்று.

ஸ்தோத்ர ரத்நத்தில் * அபூதபூர்வம் மம பாவி கிம் வா * என்கிற ச்லோகத்தைத் தழுவி அருளிச்செய்ததாயிற்று இந்த ச்லோகம். இந்த ஜந்மத்திற் செய்தவை, செய்ய வேணு மென்று ஸங்கல்பித்திருப்பவை, ஜந்மாந்தரங்களிற் செய்தவை, * த்விஷந்த: பாப க்ருத்யாம் * என்கிறபடியே அரசல் பிளந்தேறிட்டவை முதலான எல்லாப் பாபங்களையும் நினைத்து அகிலபாதகை: என்றது. ... . (7)

क्षान्तिर्नाम वरो गुणस्तव महान्श्रीरङ्गपृथ्वीपते ! सोऽयं सन्नपि सापराधनिवहाभावे न विद्योतते ।
तस्मान्नैकविधापराधकरणे निष्ठावता नित्यशः प्राप्नोत्येष मया प्रकाशमतुलं प्राप्स्याम्यहं च प्रथाम् ॥८॥

க்ஷாந்திர் நாம வரோ குணஸ் தவ மஹாந் ஸ்ரீரங்கப்ருத்வீபதே
ஸோயம் ஸந்நபி ஸாபராதநிவஹாபாவே ந வித்யோததே,
தஸ்மாந் நைகவிதாபராதகரணே நிஷ்டாவதா நித்யச:
ப்ராப்நோத்யேஷ மயா ப்ரகாசமதுலம் ப்ராப்ஸ்யாம்யஹஞ் ச ப்ரதாம் ()

ஸ்ரீரங்கப்ருத்வீ பதே! தவ க்ஷாந்தி: நாம வர: குண: மஹாந்; ஸோயம் ஸந் அபி ஸாபராத நிவஹ அபாவே ந வித்யோததே; தஸ்மாத் நைகவித அபராத கரணே நித்யச: நிஷ்டாவதா மயா ஏஷ: அதுலம் ப்ரகாசம் ப்ராப்நோதி; அஹம் ச ப்ரதாம் ப்ராப்ஸ்யாமி.

ஸ்ரீரங்கராஜனே! உனது மிகச்சிறந்த பொறுமை யென்னுங் குணமானது மஹாவைபவம் பொருந்தியது; இக்குணமானது இரா நின்றதே யாகிலும் அபராதிகளின் கூட்டம் இல்லையாகில் ப்ரகாசிக்கமாட்டாது; ஆதலால் பல்வகைக் குற்றங்களையுஞ் செய்வதில் அநவரதமும் ஊக்கமுள்ள அடியேனாலே இந்த க்ஷமாகுணமானது ஒப்பற்ற ப்ரகாசத்தை யடைகின்றது; (அடியேனும் உனது க்ஷமாகுணத்தை விளங்கச் செய்தவனென்கிற) பெரும் புகழையடையப் போகிறேன்.

குணக்கடலான எம்பெருமானுக்கு எண்ணில் பல் குணங்களிருந்தாலும் அவற்றின் பொறுமைக்குணமே மிகச்சிறந்தது. இது பெருவலிவுவாய்ந்தது. அபரிமிதமான அபராதி வர்க்கம் இருந்தால்தான் இக்குணம் மிகவிளங்கும்; இல்லையேல் ஒளிமழுங்கும். ஆகவே அபரிமிதமான அபராதங்களைச் செய்வதிலேயே அல்லும்பகலும் ஆவல்கொண்டவனான அடியேனொருவனாலேயே இத்திருக்குணம் மிகவிளக்கமடையக்கடவது. இதனை விளக்கச் செய்வதனாலுண்டாகும் பெரும்புகழும் எனக்கே உரித்தாகும்—என்றாராயிற்று. ஸாபராத நிவஹாபாவே என்றபதத்தில் (ஸாபராத) என்பதை நிவஹத்திற்கு விசேஷணமாக்கி 'அபராதங்களோடு கூடின கூட்டம்' என்று பொருள்கொள்ள நினைப்பது பொருந்தாது. இப்படி ஸமாநாதிகரணமாகவன்றிக்கே "ஸாபராதாநாம் நிவஹ:" என்று வ்யாதிகரணமாகவேயே கொள்ளவேணும். கூட்டமென்றபோதே யாருடைய கூட்டமென்று ஆகாங்க்ஷைபிறக்கு ஸாபராதா: என்றது அபராதிந: என்றபடி. [நைக] ஏகசப்தத்திற்கு நசப்தத்தோடே ஸமாஸமென்றுணர்க. ... ... (8)

मत्पापक्षपणाय योजयसि चेद्घोरेण दण्डेन मां रङ्गाधीश्वर ! केवलाघकरणाद्दुःखं मम स्यान्महत् ।
तद्द्रष्टुर्भवतोऽपि दुःखमतुलं घोरं दयालो ! भवेत् तस्मात् तेऽपि सुखाय मत्कृतमिदं सर्वं त्वया क्षम्यताम् ॥९॥

மத்பாபக்ஷபணாய யோஜயஸி சேத் கோரேண தண்டேந மாம்
ரங்காதிச்வர கேவலாககரணாத் துக்கம் மம ஸ்யாந் மஹத்,
தத்த்ரஷ்டுர் பவதோபி துக்கமதுலம் கோரம் தயாளோ பவேத்
தஸ்மாத் தேபி ஸுகாய மத்க்ருதமிதம் ஸர்வம் த்வயா க்ஷம்யதாம். (9)

தயாளோ ரங்காதீச்வர ! மத்பாப க்ஷப ணாய கோரேண தண்டேந மாம் யோஜ யஸி சேத் கேவல அக காரணாத் மம மஹாத் துக்கம் ஸ்யாத் ; தத் த்ரஷ்டு : பவத : அபி அதுலம் கோரம் துக்கம் பவேத் ; தஸ்மாத் தே அபி ஸுகாய மத்க்ருதம் இதம் ஸர்வம் த்வயா க்ஷம் யதாம்.

காருணிகனான ஸ்ரீரங்கநாதனே ! என்னுடையபாவங் களைத் தொலைப்பதற்காகக் கொடிய தண்டனையோடே என்னைச் சேர்ப்பாயாகில் [என்னைக் கொடுமையாக தண்டிக்கு மளவில்] நான் வெறும் பாவங்களையே செய்திருப்பதனால் எனக்கு (அந்த தண்டனையினால்) மஹத்தான துக்கமுண்டாகும். நான் படும் அந்த துக்கத்தைக் காணப்போகிற வுனக்கும் (தயாளுத்வ ப்ரயுக்தமாக) ஒப்பற்ற கொடிய துக்கமுண்டாகும் ; ஆகவே நீயும் ஸுகப்படுவதற்காக நான் செய்துள்ள இந்தப்பாவங்களை யெல்லாம் நீ பொறுப்பது நலம்.

ஸ்ரீரங்கநாதா! அநுபவித்தேதீரவேண்டிய அபரிமிதமான பாபங்களை நான் செய்திருக் கிறேனாதலால் அவற்றைத்தீர்க்கக் கொடிய தண்டனைகளோடே என்னைக் கூட்டியேயாக வேண்டும். அப்போது நான்படும் துயரங்களைக்கண்டு பாதுக்க துக்கித்வ ரூபமான தயாகுண முடைய நீயும் துக்கப்படவேநேரும். இப்படி ஸ்வதுக்கத்தை ஸ்வயமேவ விளைத்துக்கொள்வது நன்றோ? என் குற்றங்களை க்ஷமித்துவிட்டால் நானும் துக்கப்படவேண்டா, நீயும் துக்கப் படவேண்டா. என்னுடைய துக்கம் எப்படியாவது கிடக்கட்டும் ; உன்னுடைய ஸுகத் திற்காக க்ஷமிப்பது நலம் என்றாராயிற்று.

மூன்றாவது பாதத்தில் தயாளோ: என்று ஷஷ்டியான பாடமும் காண்கிறது. "தயாளோ: பவத:" என்று அந்வயிக்கும். ஹேதுகர்ப்பவிசேஷணம். ... (9)

देव ! त्वां शरणं प्रपन्नमपि मां दुःखान्यनन्याश्रयं बाधन्ते यदि सर्वपापनिवहात् त्वां मोक्षयिष्याम्यहम् ।
इत्युक्तं तव वाक्यमर्थविधुरं जायेत यद्वा भवान् तत्राशक्त इति प्रथेत हि ततो मां रक्षतु त्वत्क्षमा ॥१०॥

தேவ த்வாம் சரணம் ப்ரபந்நமபி மாம் துக்காந்யநந்யாச்ரயம்
பாதந்தே யதி ஸர்வபாபநிவஹாத் த்வாம் மோக்ஷயிஷ்யாம்யஹம்,
இத்யுக்தம் தவ வாக்யமர்த்தவிதுரம் ஜாயேத யத்வா பவாந்
தத்ராசக்த இதி ப்ரதேத ஹி ததோ மாம் ரக்ஷது த்வத்க்ஷமா. (10)

தேவ ! த்வாம் சரணம் ப்ரபந்நம் மாம் அபிதுக்கானி அநந்யாச்ரயம் (யதாததா) பாதந்தே யதி 'அஹம் த்வாம் ஸர்வ பாபநிவஹாத் மோக்ஷயிஷ்யாமி' இதி உக்தம் தவ வாக்யம் அர்த்த விதுரம் ஜாயேத ; யத்வா பவாந் தத்ர அசக்த: இதி ப்ரதேத ; தத : த்வத் க்ஷமா மாம் ரக்ஷது.

எம்பெருமானே ! உன்னையே தஞ்சமாகப் பற்றியிருக் கின்ற என்னையும் துக்கங்களானவை வேறொரு புகலின்றிக்கே என்னையே பற்றிநின்று நலியுமாகில் "அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி" என்று சொன்ன உனதுவார்த்தை பொருளற்றதாக ஆய்விடும் ; அல்லது நீ அந்த விஷயத்தில் [ஸர்வபாப மோசநத்தில்] அசக்தனென்றாவது விளங் விடும்; ஆதலால் உனது பொறுமைக்குணம் என்னைக் காத் திடுக.

திருத்தேர்த்தட்டிலே அர்ஜுநனை வ்யாஜமாகக்கொண்டு அஸ்மதாதிகளுக்கும் அநு வயிக்கும்படியாக அருளிச்செய்த சரமச்லோகார்த்தம் பழுதுபடாதபடிக்கு அடியேனை க்ஷமைக்கு இலக்காக்கியேயாகவேணுமென்கிறார். பிரானே ! * மாமேகம் சரணம் வ்ரஜ என்று கட்டளையிட்டபடியே உன்னையே சரணமாகப்பற்றி நின்றேனடியேன்! இவ்வளவிலும் பாபபலன்கள் என்னைவந்து நலியாநின்றனவே; "அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷ யிஷ்யாமி" என்றது பலிக்கப்பெறவில்லையே; இதனால் அந்த சரமச்லோகம் அர்த்தமில்லாத வார்த்தை யென்றோ, ஒரு அசக்தன் சொன்னவார்த்தையென்றோ உலகில் பரவிவிடுமே; இப்படிப்பட்ட அவத்யத்தை ஸம்பாதித்துக் கொள்வதிற்காட்டிலும் "என்னுடம்பிலழுக்கை

நானே போக்கிக் கொள்ளேனோ?" என்றும், "உன்னுடைய பாபங்களை நான் க்ஷமித்தருள நீ சோகிக்கக்கடவையோ?" என்றருளிச் செய்தபடியே எனது பாபங்களை க்ஷமித்து என்னைக் காத்தருள்வது நன்று—என்றதாயிற்று. "அநந்யாச்ரயம்" என்பதை மாம் என்பதற்கு விசேஷணமாகக் கொள்வது ஏற்கும். பாதக்தே என்ற க்ரியையிலே விசேஷணமாகக் கொள்வதே ஸ்வரஸம். ப்ரதேத என்கிற க்ரியைக்கு பவாந் என்பது கர்த்தாவாகவுமாம்; இதி (அயம்விஷய:) என்று அத்யாஹரித்துக்கொள்ளக்கூடியதானது கர்த்தாவாகவுமாம். (10)

न त्वं क्षाम्यसि चेदिदं मम कृतं नास्त्यत्र काचित्क्षतिः पूर्वं यत्समभूत् तदेव हि पुनर्जायेत तज्जायताम् ।
यद्वा स्यादधिकं च सोऽपि सुमहान् लाभोऽस्तु मे तादृशः स्वामिन् ! दासजनस्तवायमधिकं स्वैरेण दूरीभवेत् ॥११॥

ந த்வம் க்ஷாம்யஸி சேதிதம் மம க்ருதம் நாஸ்த்யத்ர காசித் க்ஷதி:
பூர்வம் யத் ஸமபூத் ததேவ ஹி புநர் ஜாயேத தஜ்ஜாயதாம்;
யத்வா ஸ்யாததிகஞ் ச ஸோபி ஸுமஹாந் லாபோஸ்து மே தாத்ருச:
ஸ்வாமிந் தாஸஜநஸ் தவாயமதிகம் ஸ்வைரேண தூரீபவேத். 11

ஸ்வாமிந் மம க்ருதம் இதம் த்வம் ந க்ஷாம்யஸி சேத் அத்ர காசித் க்ஷதி: நாஸ்தி; பூர்வம் யத் ஸமபூத் தத் ஏவ ஹி புந: ஜாயேத தத் ஜாயதாம்; யத் வா அதிகம் ச ஸ்யாத் ஸ: அபி மே ஸுமஹாந் லாப: அஸ்து; தாத்ருச: அயம் தவ தாஸஜந: அதிகம் ஸ்வைரேண தூரீபவேத்.

எம்பெருமானே! என்னுடைய செய்கையான இந்த பாபத்தை நீ க்ஷமியாதொழியில் இதில் யாதொரு ஹாநியுமில்லை. இதுவரையில் பாப பலனாக என்ன நேர்ந்ததோ அதுவே யன்றோ மீண்டும் மீண்டும் நேரப் போகிறது; அது தாராளமாக நேரட்டும்; அல்லது முன்னிலும் அதிகமாகவே நேர்ந்தாலும் நேரட்டும்; அதுவும் எனக்குப் பெரிய லாபமாகவே ஆயிடுக; அப்படிப்பட்ட இந்த உனது தாஸஜனமானது மிகவும் யதேஷ்டமாக விலகி அகன்றொழியும்.

எம்பெருமானே! நான்செய்த குற்றங்களை சரமச்லோகத்தின்படியே க்ஷமித்தருளாமல் *கல்பகோடி சதேநாபி ந க்ஷமாமி வஸுந்தரே!* என்றபடி நிக்ரஹத்திற்கே இலக்காக்குமளவில் அடியேனுக்கு ஹாநியொன்றுமில்லை; தேவரீருக்கே மிகுந்த ஹாநியாகுமென்பது பரமதாத்பர்யம். அதுவே மேல்மூன்று பாதங்களினால் ஸூசிப்பிக்கப்படுகிறது. *அபூதபூர்வம் மம பாவி கிம்வா* என்றபடி, இதுவரையில் நேராத பாபபலன் எனக்கினி அபூர்வமாக என்ன நேரிடப்போகிறது? நேர்ந்த துக்கங்களே மாறிமாறி நேரப்போகின்றன; அபூர்வமாக அளவுகடந்த துக்கங்கள் நேர்ந்தாலும் நேரட்டுமே, நமக்குக்கிடைக்கிற பொருள் அதிகமாகவே கிடைத்தால் அதனைப்பெருத்த லாபமாகவே கொள்ளுங்கணக்கிலே நானும் கொள்ளக்கடவேன். எனக்கு லாபமென்பது மாத்திரமேயன்றி உனக்குப்பெருத்த நஷ்டமென்பதும் குறிக்கொள்ளத்தக்கது. நான் உனது திருவடிகளைச் சார்ந்தவனாகாமே அகன்றொழியவன்றோ நேரும்! அது உனக்கு நஷ்டமன்றோ! ஆகவே உன்சரக்கு தப்பிப்போகாமே நோக்கிக்கொள்ளப்பாராய் என்றதாயிற்று. ... ... (11)

सोऽहं क्षुद्रतया जुगुप्सिततमं दुष्कर्म नित्यं स्मरन् कुर्वन् काममशुद्धरीतिरभवं श्रीरङ्गपृथ्वीपते !
एतत्ते महतो विशुद्धमनसा स्मर्तुं न युक्तं खलु क्षान्त्या विस्मर तत्ततोऽहमसुखान्मुक्तो भवेयं सुखी ॥१२॥

ஸோஹம் க்ஷுத்ரதயா ஜுகுப்ஸிததமம் துஷ்கர்ம நித்யம் ஸ்மரந்
குர்வந் காமமசுத்தரீதிரபவம் ஸ்ரீரங்கப்ருத்விபதே,
ஏதத் தே மஹதோ விசுத்தமநஸா ஸ்மர்த்தும் ந யுக்தம் கலு
க்ஷாந்த்யா விஸ்மர தத் ததோஹமஸுகாந் முக்தோ பவேயம் ஸுகீ. 12

ஸ்ரீரங்கப்ருத்வீபதே ஸோஹம் க்ஷாந்த்ரதயா ஜுகுப்ஸிததமம் துஷ்கர்ம நித்யம் ஸ்மரந் காமம் குர்வந் அசுத்தரீதி: அபவம்; ஏதத் மஹத: தே விசுத்த மநஸா ஸ்மர்த்தும் நயுக்தம் கலு; தத் க்ஷாந்த்யா விஸ்மர; தத: அஹம் அஸாகாத் முக்த: ஸாகீ பவேயம்.

ஸ்ரீரங்கராஜனே! பழைய நான் நீசனுகையாலே மிகவும் வெறுக்கத்தக்க துஷ்கர்மத்தை இடைவிடாது சிந்தித்துக்கொண்டு (அதை) மனம்போனபடி செய்துகொண்டு அசுத்தமான தன்மையையுடையவனுக ஆயினேன்; இக்கிலேமையானது மஹானுனவுனக்கு பரிசுத்தமான திருவுள்ளத்தினுல் ஸ்மரிக்கத்தகாதன்றே; அதனை க்ஷமாகுணத்தினுல் மறந்துவிடுக. அப்படி மறக்குமளவில் அடியேன் துக்கத்தினின்றும் விடுபட்டு ஆனந்தசாலியாக ஆவேன்.

தம்முடைய பாபங்களை க்ஷமிக்கவேண்டுமென்பதற்கு ரஸோக்தியாக ஒரு ஹேதுவை விண்ணப்பஞ்செய்கிறுரிதில். ஸ்ரீரங்கநாதனே! பாபங்களைச் செய்த நான் அவற்றைச் செய்யும்போதும் அதற்குப் பூர்வாங்கமாக அதைப்பற்றி ஸங்கல்பிக்கும்போதும் அவற்றை நெஞ்சால் நினைக்கவேண்டுகையாலே நினைத்து மிகவும் அசுத்திபெற்றவனுயினேன். *நீசனேன்நிறையொன்றுமிலேனென்றிருக்குமடியேனுக்கு இது தகும். என்னை நீ தண்டிக்க வேண்டில் இப்படிநான் செய்த பாவங்களையெல்லாம் எண்ணியெண்ணியன்றோ தண்டிக்க வேண்டும். அப்படியெண்ணுவதுதானும் உனக்கு அவத்யாவஹமன்றோ? க்ஷுத்ரனுனவெனக்கு இது தகுமாயினும் மஹானுனவுனக்கு இது தகாதன்றோ. ஆகவே தண்டனைக்காகவாகிலும் என்குற்றங்களை ஸ்மரித்து அவத்யம் பெறுவதிற்காட்டிலும் க்ஷாந்தியினுல் அவற்றை அறவே மறந்துவிடுவது நலம். இது நம்மிருவர்க்கும் க்ஷேமாபவாகிறது என்றுராயிற்று. ... ... (12)

तत्तत्कर्मफलानुरूपमखिलो लोकस्त्वया सृज्यते तस्मात्कर्मवशंवदत्वमधिकं वक्तुं तवापि क्षमम् ।

श्रीरङ्गेश्वर ! तत्प्रशान्तिविधये क्षान्त्या निराकृत्य मे सर्वं पातकमाशु दर्शय भवत्स्वातन्त्र्यमत्युज्ज्वलम् ॥१३॥

தத்தத்கர்மபலாநுரூபமகிலோ லோகஸ் த்வயா ஸ்ருஜ்யதே
தஸ்மாத் கர்மவசம்வதத்வமதிகம் வக்தும் தவாபி க்ஷமம்,
ஸ்ரீரங்கேச்வர தத்ப்ரசாந்திவிதயே க்ஷாந்த்யா நிராக்ருத்ய மே
ஸர்வம் பாதகமாசு தர்சய பவத்ஸ்வாதந்த்ர்யமத்யுஜ்ஜ்வலம். 13

ஸ்ரீரங்கேச்வர அகில: லோக: தத்தத் கர்ம பல அநுரூபம் த்வயா ஸ்ருஜ்யதே; தஸ்மாத் கர்ம வசம்வதத்வம் அதிகம் தவ அபி வக்தும் க்ஷமம்; தத்ப்ரசாந்தி விதயே மே ஸர்வம் பாதகம் க்ஷாந்த்யா நிராக்ருத்ய பவத் ஸ்வாதந்த்ர்யம் அத்யுஜ்ஜ்வலம் ஆசு தர்சய.

ஸ்ரீரங்கநாதனே! எல்லாவுலகமும் அந்தந்த கரும பலன்களுக்குத் தகுதியாக உன்னுல் படைக்கப்படுகிறது; ஆதலால் கர்மபாரதந்த்ரியமானது அதிகமாக உனக்கும் சொல்ல ப்ராப்தமாகும். அந்த கர்மபாரதந்த்ரியம் குலேவதற்காக எனது ஸகலபாபங்களையும் பொறுமையினுல்தள்ளி உனது ஸ்வாதந்திரியத்தை மிக்கபுகர்பெற்றதாக சீக்கிரம் காட்டியருளவேணும்.

ஸ்ரீரங்கநாதனே! ஸம்ஸாரிகளான நாங்களே கருமங்களுக்கு வசப்பட்டவர்களென்றும் நீ அப்படிப்பட்டவனல்லாத ஸ்வதந்த்ரனென்றும் ப்ரஸித்தியிருந்தும் நீயும் கர்மபாரதந்த்ரனுகக் காணுகின்றுய்; எங்ஙனேயென்னில்; *வைஷம்யநைர்க்ருண்யே ந ஸாபேக்ஷத்வாத்* என்ற ஸூத்ரத்தின்படி அவரவர்கள் செய்த கருமங்களுக்கு வசப்பட்டே ஸ்ருஷ்டிகளைச் செய்துபோராநின்றபடியினுலே கர்மபாரதந்திரியம் உனக்குத் தவிர்க்க வொண்ணுதாயிற்று. இது ஸ்ருஷ்டிவிஷயத்தில் மாத்திரமன்றே. ஸ்ருஷ்ட்யுபலக்ஷிதமான லோகநிர்வாஹம் முழுவதிலும் இங்ஙனேயன்றோ, இப்படி இந்த கர்மபாரதந்த்ரியமே ஓங்குமளவில் உன்னுடைய ஸ்வாதந்திரியம் புகாழிந்துபோமே; இது தகுதியன்றே. ஆதலால் அடியேனுடைய கருமங்களுக்குத் தகுந்த பலனைக் கொடுப்பதென்கிற வழியிலேநின்று ஸ்வாதந்திரி

யத்தைவிழந்து கர்மபாரதந்திரியமாகிற அபக்யாதியை ஸம்பாதிக்கத் திருவுள்ளம் பற்றாமல் அடியேனுடைய பாபங்களையெல்லாம் க்ஷமித்தருள்வது நன்று என்றாராயிற்று. ... (13)

श्रीरङ्गेश ! वचो मदीयमधुना व्यक्तं त्वया श्रूयतां पुण्यं तत्फलसङ्गमात्रविरहाद्भूयो न मां प्राप्नुयात् ।
पापं नैव तथा फलं वितनुते शक्यं न तद्वारणं तत्क्षान्त्या तव शक्यमेव तदियं सद्यस्त्वया कल्प्यताम् ॥१४॥

ஸ்ரீரங்கேச வசோ மதீயமதுநா வ்யக்தம் த்வயா ச்ரூயதாம்
புண்யம் தத்பலஸங்கமாத்ரவிரஹாத் பூயோ ந மாம் ப்ராப்நுயாத்,
பாபம் நைவ ததா, பலம் விதநுதே, சக்யம் ந தத்வாரணம்
தத்க்ஷாந்த்யா தவ சக்யமேவ ததியம் ஸத்யஸ் த்வயா கல்ப்யதாம். 14

ஸ்ரீரங்கேச! அதுநா மதீயம் வச: த்வயா வ்யக்தம் ச்ரூயதாம்; புண்யம் தத் பல ஸங்க மாத்ர விரஹாத் பூய: மாம் ந ப்ராப்நுயாத். பாபம் (து) ததா நைவ; பலம் விதநுதே; தத்வாரணம் ந சக்யம்; தத் தவ க்ஷாந்த்யா சக்யம் ஏவ; தத் இயம் ஸத்ய: த்வயா கல்ப்யதாம்.

ஸ்ரீரங்கநாதனே! இப்போது அடியேனுடையதான வார்த்தையொன்று உன்னால் நன்றாகக் கேட்கப்படவேண்டும்; (அது யாதெனில்) புண்யமானது அதனுடைய பலனை விரும்பாதவளவில் பெரும்பாலும் அது என்னை வந்துசேராது; பாபமோவென்றால் அப்படியன்று; (அதன்பலனை விரும்பாமற்போனாலும்) பாபமானது பலனை விளைத்தேதீரும்; அதனைத்தடுப்பது அஸாத்யம்; அப்படி தடுப்பதானது உன்னுடைய க்ஷமாகுணத்தினால் ஸாத்யமேயாகும்; ஆகவே இந்த க்ஷாந்தியானது உடனே உன்னால் செய்யப்படட்டும்.

புண்யத்திற்கும் பாபத்திற்கும் பலனளிக்கும் விஷயத்திலே ஒருவாசியுண்டு; அதாவது, புண்யம் செய்பவர்கள் அதன் பலனை விரும்பினால்தான் அதுவந்தடையும். விரும்பாதவளவில் அது அணுகாது. பாபமோவென்னில் அப்படிப்பட்டதல்ல; பாபபலனை விரும்பாமலே நான் பாபத்தைச் செய்கிறேனென்றாலும் அதன் பலன் வந்தே தீரும். அடியேன் செய்த பாவங்களுக்குப்பலனான துக்கானுபவங்கள் தவிரா; 'பாபங்களை நான் பொறுத்து விட்டேன்' என்று நினைப்பிடுமளவில் பாபங்களானவை பலன்கொடுக்க மாட்டாவாதலால் அந்த க்ஷாந்தியைச் செய்தருளவேணுமென்று பிரார்த்திக்கிறேனென்றாராயிற்று.

["புண்யஸ்ய பலமிச்சந்தி புண்யம் நேச்சந்தி மாநவா:, நபாபபலமிச்சந்தி பாபம் குர்வந்தி ஸந்ததம்"] புண்யத்தின்பயனை ஸுகாநுபவத்தில்மாத்திரம் உலகர் விருப்பங்கொள்ளுகிறார்கள்; ஆனால் ஸாதனமாகிய புண்யத்தைச் செய்வதில்லை, பாபபலனை துக்காநுபவத்தில் விருப்பமற்றிருக்கச் செய்தேயும் தத்ஸாதனமான பாபத்தை மாத்திரம் இடைவிடாது செய்துபோருகின்றனர்—என்றபடியே அடியேன் செய்த பாவங்களுக்கு தேவரீருடைய க்ஷமையல்லது புகலில்லையென்றாராயிற்று. தத்பலஸங்கமாத்ரவிரஹாத் என்றது—விரஹே ஸதி என்றபடி. ... ... (14)

श्रीरङ्गेश्वर ! पुण्यपापफलयोः स्वाधीनतां कुर्वतोः सर्वेषां सुखदुःखयोः स्वयमहं ममाशयो मामपि ।
स्मर्तुं न प्रभवामि किं पुनरहो त्वामन्तरन्तः स्थितं तत्ते त्वं क्षमया निरस्य कुरु मे त्वद्ध्यानयोग्यां दशाम् ॥१५॥

ஸ்ரீரங்கேச்வர புண்யாபாபபலயோஸ் ஸ்வாதீநதாம் குர்வதோ:
ஸர்வேஷாம் ஸுகது:கயோஸ் ஸ்வயமஹம் மந்நாசயோ மாமபி,
ஸ்மர்த்தும் ந ப்ரபவாமி கிம் புநரஹோ த்வாம் அந்தரந்தஸ் ஸ்திதம்
தத்தே த்வம் க்ஷமயா நிரஸ்ய குரு மே த்வத்த்யாநயோக்யாம் தசாம்.

ஸ்ரீரங்கேச்வர! ஸர்வேஷாம் ஸ்வாதீநதாம் குர்வதோ: புண்ய பாப பலயோ: ஸுக து:கயோ: ஸ்வயம் மக்ந ஆசய: அஹம் மாம் அபி ஸ்மர்த்தும் ந ப்ரபவாமி; அந்த: அந்த: ஸ்திதம் த்வாம் (ஸ்மர்த்தும்) கிம் புந:; தத் த்வம் தே க்ஷமயா நிரஸ்ய த்வத் த்யாந யோக்யாம் தசாம் மே குரு.

ஸ்ரீரங்கநாதனே! (உலகில்) எல்லாரையும் தம் வசப்படுத்திக் கொள்ளுகின்ற புண்யபாவங்களின் பலனான இன்பதுன்பங்களில் ஸ்வயமாகவே ஈடுபட்டிருக்கின்ற அடியேன் என்னையே ஸ்மரிக்க சக்தியற்றவனாயிருக்கின்றேன்; உள்ளுக்குள்ளே பதிந்து கிடக்கிற உன்னை ஸ்மரிக்கவில்லை யென்பது பற்றிச் சொல்லவும் வேணுமோ? அந்த அசக்தியை நீ உன்னுடைய பொறுமையினால் போக்கி உன்னையே சிந்திப்பதற்குரிய நிலைமையை எனக்கு உண்டாக்கி யருள வேணும்.

உலகத்தவர்கள் புண்யமோ பாபமோ இரண்டிலொன்றைச் செய்து தீரவேண்டும். புண்யம்செய்தால் அதன்பலனான ஸுகாநுபவத்திலே ஈடுபடநேர்கின்றது. பாபம்செய்தால் அதன்பலனான துக்காநுபவத்திலே ஈடுபடநேர்கின்றது. அப்போது ஸ்வாத்மாவையே மறந்து கிடக்கவேண்டியதாகின்றது. இப்படி யாவரையும் தன்வசத்திலிழுக்கின்ற புண்யபாப பலன்களான இன்பதுன்பங்களில் ஈடுபட்டு ஸ்வாத்மாவையே மறந்திருக்கின்ற அடியேன் நிலைகாணவொண்ணாதவிடத்திலே பதிந்துகிடக்கின்ற தேவரீரை ஸ்மரிக்க ப்ரஸக்தியிலேசமுமில்லையே; இங்ஙனே அடியேன்பாழ்பட்டுப் போகலாமோ? தேவரீருடைய க்ஷமாகுணத்தினால்—அடியேன் கருமபலன்களுக்கு ஈடுபட்டு தேவரீரை மறந்திருக்குமிருப்பைத் தவிர்த்து தேவரீரைச் சிந்திக்கவல்லேனாம்படி செய்தருளவேணு மென்றதாயிற்று. ... (15)

अल्पं चेदनवेक्षणीयसरणावारोप्यतां मत्कृतं किञ्चिद्भूरि भवेदिदं यदि गुरून् संप्रेक्ष्य मे त्यज्यताम् ।
यद्वाऽनन्तमनन्तवैभवजुषो रङ्गक्षमावल्लभ ! त्वत्क्षान्त्याः खलु लक्ष्यतामनुगुणामानीयतां तत्त्वया ॥१६॥

அல்பஞ்சேதநவேக்ஷணீயஸரணாவாரோப்யதாம் மத்க்ருதம்
கிஞ்சித் பூரி பவேதிதம் யதி குரூந் ஸம்ப்ரேக்ஷ்ய மே த்யஜ்யதாம்,
யத்வாநந்தமநந்தவைபவஜுஷோ ரங்கக்ஷமாவல்லப
த்வத்க்ஷாந்த்யா: கலு லக்ஷ்யதாமநுகுணமாநீயதாம் தத் த்வயா. (16)

ரங்கக்ஷமாவல்லப! மத்க்ருதம் அல்பம் சேத் அநவேக்ஷணீய ஸரணௌ ஆரோப்யதாம்; இதம் கிஞ்சித் பூரி பவேத் யதி மே குரூந் ஸம்ப்ரேக்ஷ்ய த்யஜ்யதாம்; யத்வா அநந்தம் யதி தத் அநந்தவைபவ ஜுஷ: த்வத் க்ஷாந்த்யா: அநுகுணம் லக்ஷ்யதாம் த்வயா ஆநீயதாம்.

ஸ்ரீ ரங்கபூபதியே! நான் செய்த பாவமானது (தேவரீர் திருவுள்ளத்தினால்) சிறிதாகத் தோற்றுமாகில் காணாக்கண்ணிட்டிருக்கவேணும்; நான் செய்தபாவமானது சிறிது அதிகமாகத் தோற்றுமானால் அடியேனுடைய ஆசிரியர்களைக் கடாக்ஷித்து, விடப்படட்டும். (என்னுடைய பாபம்) அளவுகடந்ததாக இருக்குமாகில் அந்தப்பாபமானது அபரிமிதமான வைபவம் வாய்ந்த தேவரீருடைய க்ஷமாகுணத்திற்குப் பொருத்தமான இலக்காயிருக்குந்தன்மையை தேவரீரால் அடைவிக்கப்படட்டும்.

அடியேன் செய்தபாவங்கள் உண்மையில் அளவுகடந்தவையேயானாலும் தேவரீர் திருவுள்ளத்தால் ஒருகால் அவை அற்பமாகத் தோன்றினால் இதுவொரு பொருளோவென்று இகழ்ந்து காணாக்கண்ணிட்டிருக்கவமையும்; அங்ஙனன்றிக்கே அடியேன் செய்த பாவங்கள் சிறிது பெரியனவாகத் தோன்றினால் * பிதாமஹஞ் நாதமுநிம் விலோக்ய ப்ரஸீத மத்வ்ருத்த மசிந்தயித்வா* என்கிறபடியே அடியேனுடைய ஆசிரியர்களைக் கடாக்ஷித்து அவர்களுடைய குடல்துடக்குடையனன்றோவிவன்! என்று கொண்டு அவர்களுக்காக விட்டுத்தொலைக்க வமையும். அங்ஙனுமன்றிக்கே அடியேன் செய்த பாவங்கள் அபரிமிதங்களாகவே

திருவுள்ளத்தில் தோன்றுமாகில், எப்படிப்பட்ட குற்றங்களையும் பொறுக்கவல்ல பெருமை வாய்ந்த தேவரீருடைய க்ஷமாகுணத்திற்குத் தகுந்த இலக்காக்கியருளவமையும். ஆகவே, எந்த விதத்திலும் அடியேனுடைய பாபங்கள் அடியேனை தேவரீர் நிக்ரஹிக்கைக்கு உறுப்பாக வொண்ணாதென்று விஜ்ஞாபித்தாயிற்று. ... . (16)

संत्यक्तसर्वविहितक्रियमर्थकामश्रद्धालुमन्वहमनुष्ठितनिन्द्यकृत्यम् ।
अत्यन्तनास्तिकमनात्मगुणोपपन्नं मां रङ्गराज ! परया कृपया क्षमस्व ॥१७॥

ஸந்த்யக்தஸர்வவிஹிதக்ரியம் அர்த்தகாம
ச்ரத்தாளும் அந்வஹமநுஷ்டிதநிந்த்யக்ருத்யம்,
அத்யந்தநாஸ்திகமநாத்மகுணோபபந்நம்
மாம் ரங்கராஜ பரயா க்ருபயா க்ஷமஸ்வ. (17)

ரங்கராஜ! ஸந்த்யக்த ஸர்வ விஹித க்ரியம் அர்த்த காம ச்ரத்தாளும் அந்வஹம் அநுஷ்டித நிந்த்ய க்ருத்யம் அத்யந்த நாஸ்திகம் அநாத்மகுண உபபந்நம் மாம் பரயா க்ருபயா க்ஷமஸ்வ

ஸ்ரீரங்கநாதனே! சாஸ்திரங்களில் விதிக்கப்பட்ட எல்லாக் காரியங்களையும் அறவே விட்டவனும் அர்த்தகாமங்களிலேயே பற்றமுள்ளவனும் சாஸ்த்ரங்களில் கர்ஹிக்கப்பட்ட தீவினைகளையே நிச்சலும் செய்து போருமவனும் மிகவும் நாஸ்திகனும் தீய குணங்கள் நிரம்பினவனுமிருக்கிற அடியேனைப் பரம க்ருபையினாலே க்ஷமித்தருளவேணும்.

श्रीमान् कूरान्ववाये कलशजलनिधौ कौस्तुभाभोऽवतीर्णः श्रीवेदव्यासभट्टारकतनयवरो रङ्गराजस्य हृद्यः ।
वेदाचार्याग्र्यनामा विदितगुणगणो रङ्गिणः स्तोत्रमेतत् चक्रे नित्याभिजप्यं सकलतनुभृतां सर्वपापापनुत्त्यै ॥१८॥

ஸ்ரீமாந் கூராந்வவாயே கலசஜலநிதௌ கௌஸ்துபாபோவதீர்ண:
ஸ்ரீவேதவ்யாஸபட்டாரகதநயவரோ ரங்கராஜஸ்ய ஹ்ருத்ய:,
வேதாசார்யாக்ர்யநாமா விதிதகுணகணோ ரங்கிணஸ் ஸ்தோத்ரமேதத்
சக்ரே நித்யாபிஜப்யம் ஸகலதநுப்ருதாம் ஸர்வபாபாநுத்த்யை. (18)

கூராந்வவாயே கலச ஜலநிதௌ கௌஸ்துபாப: அவதீர்ண: ஸ்ரீவேதவ்யாஸ பட்டாரக தநயவர: ரங்கராஜஸ்ய ஹ்ருத்ய: விதிதகுணகண: ஸ்ரீமாந் வேதாசார்யாக்ர்ய நாமா ரங்கிண: ஸ்தோத்ரம் ஏதத் ஸகல தநுப்ருதாம் ஸர்வபாப அபநுத்த்யை நித்ய அபிஜப்யம் சக்ரே.

கூரகுலமாகிற பாற்கடலிலே கௌஸ்துபமணிபோல் அவதரித்தவரும் ஸ்ரீவேதவ்யாஸ பட்டருடைய திருக்குமாரரும் ஸ்ரீரங்கநாதனுக்குத் திருவுள்ள முகந்தவரும் ஜகத்ப்ரஸித்தமான திருக்குணங்களையுடையவருமான ஸ்ரீவேதாசார்யபட்டரென்பவர் ஸ்ரீரங்கநாதன் விஷயமான ஸ்தோத்ரமாகிய இந்த க்ஷமாஷோடசியை ஸமஸ்த ப்ராணிகளுக்கும் ஸகல பாபங்களும் தீருகைக்கு நித்யமும் அநுஸந்திக்கத் தக்கதாக அருளிச்செய்தார்.

(இது இந்த ஸ்தோத்ரகர்த்தாவின் சிஷ்யர்களிலொருவர் பணித்தது.)

ஸ்ரீகாஞ்சீ ப்ரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசாரியர் இயற்றிய
க்ஷமாஷோடசியுரை முற்றுப்பெற்றது.